BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ப்ட்டன் நகர் மன்றமானது தொடர்ச்சியாக நான்காவது முறையாக வரி ஏற்றம் இல்லாமலும், ப்ராம்ப்ட்டன் நகரில் சுகாதாரப் பராமரிப்புக்கான விரிவாக்கம் மீது இதுவரை இருந்த அளவை விட அதிக அர்ப்பணிப்பு கொண்டபடியும் இருக்கின்ற 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.**

ப்ராம்ப்ட்டன், ON (டிசம்பர் 8, 2021) – இன்றைய நகரசபைக் கூட்டத்தில், ப்ராம்ப்ட்டன் நகருக்கான 2022 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்டத்திற்கு நகரசபை ஏகமனதாக ஒப்புதல் வழங்கியது.

நகரசபையின் இந்த ஆயுட்கால கட்டத்தில், நகரசபையானது நிதிரீதியான நிலைத்து நிற்கும் தன்மையை தலையாய கடமையாக மனதில் வைத்தது; இதற்காக, சேவையை மிக உன்னதமானதாகப் பேணிவரும் அதே வேளையில், குடியிருப்புவாசிகளுக்கும் வியாபாரிகளுக்கும் மதிப்பு கூட்டும் வகையில் பணியாற்றியது. இதன் ஆயுட்காலத்தில் கடைசியாக அமைந்த இந்த வரவு செலவு திட்டமானது, நகரின் வரவு செலவு திட்டத்திற்கான நிதி சேர்க்கும் வகையில் விதிக்கப்படும் சொத்து வரி உயர்வு (0% உயர்வு) ஏதும் இல்லாத வகையில் உள்ளது; சொத்து வரி மீது, தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக உயர்வு ஏதும் செய்யப்படவில்லை. அதே வேளையில், கையிருப்பு நிதியாக $114 மில்லியன் பங்களிப்பு வைக்கப்படுகிறது மற்றும் புதிய பீல் நினைவு மருத்துவமனைக்காக $62.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்ததன் மூலமாக, மக்களின் உடல் ஆரோக்கியப் பராமரிப்புக்கான விரிவாக்கம் மீது தனது கடமையுணர்வையும் காண்பித்துள்ளது.

தொடர்ந்து நான்காவது ஆண்டாக சொத்து வரி உயர்வு இல்லாமல் இருக்கும் அதே சமயத்தில், இந்த 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டமானது கவுன்சிலின் ஆயுட்கால முன்னுரிமை கொண்ட விஷயங்களுக்கு துணை நிற்கிறது; கோவிட்-19 தொற்று பரவலின் தாக்கத்திலிருந்து விடுபட்டு நகரம் முன்னேறிச் செல்கையில், நிதிரீதியான நிலைத்து நிற்கும் தன்மை, வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மை ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகிறது.

நகரின் 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் பற்றிய மேலும் தகவல்களை, இங்கு காணலாம்.

**எண்கள் வகையில் சொல்வதென்றால்**

- வரிவிதிப்பு வகையில் நகரின் பாகமாக, 0% சொத்து வரி உயர்வுக்கு, இந்த ஒப்புதல் அளிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம் வழி வகுக்கிறது.

- 2022 ஆம் ஆண்டின் மொத்த வரவு செலவுத் திட்ட தொகையானது $1.1பில்லியன் ஆகும்; இதில் இயக்க செலவுகளுக்காக (பராமரிப்பு, வசதிகள் செய்தல், கையிருப்பு நிதி, பணியாளர் ஊதியம் ஆகியவற்றுக்காக) $780 மில்லியன் மற்றும் $341 மில்லியன் மூலதன பட்ஜெட் (பொருட்கள் கொள்முதல், சொத்துக்களின் மீது பெரிய அளவிலான பழுது பார்த்தல் மற்றும் மாற்றி வைத்தல்: சாலைகள், கட்டிடங்கள் முதலான) வகைக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது
- நகரின் வரவு செலவுத் திட்டமானது, எப்போதுமில்லாத மிகப்பெரிய அளவில் $117 மில்லியன் தொகையைக் கையிருப்பாக வைக்கிறது; இது நகரின் நிதிரீதியான நிலையை வலுவாக்குவதுடன் எதிர்கால எதிர்பாராத மற்றும் அவசர கால செலவினங்களுக்கும் உள்கட்டுமானம் மற்றும் பேருந்து போக்குவரத்து ஆகியவற்றுக்கும் கைகொடுக்கும்.

**முக்கிய அம்சங்கள்**

- $65.2 மில்லியன் – இளைஞர் மையம் மற்றும் ஸ்போர்ட்ஸ் ஹால் ஆஃப் ஃபேம் உள்ளிட்ட பொழுது போக்கு வசதிகளுக்கான கட்டிடங்கள் கட்டுமான செய்ய
- $4.7 மில்லியன் – அண்டை அயலில் இருக்கும் பூங்காக்களை புதிதாக உருவாக்க அல்லது மேம்படுத்த; பாதைகள், விளையாட்டுத் தடங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் நடை/ஓடு பாதைகளின் தரம் உயர்த்த;
- $9.1 மில்லியன் – டவுண்டவுனில் மூன்றாண்டுக் காலத்தில் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தி ஊக்குவிக்க; $13.4 மில்லியன் - டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் மறு உயிர்ப்பித்தல் முனைப்புக்களுக்காக; மற்றும் $20 மில்லியன் - புதுமை படைத்தலுக்கான மைய கட்டிட கட்டுமானம் கட்டுவதற்கு தயாராக;
- $19 மில்லியன் – புதிய பேருந்துகளுக்காக; இவற்றில் பெரும்பாலானவை மின்சார பேருந்துகளாக இருக்கும்; $17 மில்லியன் – ஸூம் சேவையின் சிங்க்வாகவ்ஸி பிரதேசத்தின் விரிவாக்கத்திற்காக ($3.3 மில்லியன் 2022 இல்);
- $22.6 மில்லியன் -சாலைகள் தளம் வேய்வதற்காக, மறுகட்டுமானம் மற்றும் இதர மேம்படுத்தலுக்காக
- $100 மில்லியன் மூன்றாண்டுக் காலத்தில் ரிவர்வாக் திட்டப்பணிக்காக ($9.3 மில்லியன் 2022 இல்); இது வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் டவுண்டவுன் உள்ளிட்ட சுற்றுப்புறப் பகுதிகளில் பொருளாதார உட்பொதிவினை வெளிக்கொண்டுவர;
- கறுப்பர் இன மற்றும் பூர்வ குடி இளைஞர்களுக்கு உள்ளிருப்பு பயிற்சி மற்றும் கூட்டுறவு நிகழ்ச்சித் திட்டங்கள்; ப்ராம்ப்ட்டன் நூலகத்தில் பரந்துபட்ட தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கும் திட்டம்
- சாலப் பாதுகாப்பிற்காக, வேகத்தடுப்புக் கட்டுப்பாட்டு அமலாக்கம் செய்யும் வகையில் புதிய எட்டு தானியங்கி கேமிராக்கள்

**சமூகத்தினரால் செதுக்கப்பட்டது**

2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்திற்கு தங்கள் கருத்துக்களை வழங்க பொதுமக்கள் அழைக்கப்பட்டனர்; இதில் மின்னஞ்சல், தொலைபேசி, டெலிடவுன்ஹால்கள் உள்ளிட்ட அனைத்தும் ஈடுபடுத்தப்பட்டன:

- 50 வணிகர்கள் பங்கேற்ற அர்ப்பணிப்பு நிறைந்த வியாபார டவுன்ஹால் மூலமாக
- 5900 குடியிருப்புவாசிகள் பொதுமக்களுக்கான டெலி டவுன்ஹால் மூலமாக
- 280 பதில்கள் பெறப்பட்டன- சமூக ஊடக தேர்தல் மூலமாக
- ஒன்பது முறை பணி நிமித்த பிரதிநிதிகள் அனுப்பிவைத்தல்
- டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் BIA ப்ராம்ப்ட்டன் நூலகம் உள்பட உள்ளூர் வாரியங்களில் இருந்து இரண்டு முறைபிரதிநிதித்துவம் செய்தல்

நவம்பர் மாதம் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட குழுவில் பல குடியிருப்புவாசிகள், நிறுவன அமைப்புக்கள் மற்றும் வளர்ச்சியில் பங்கேற்போர் ஆகியோரிடம் இருந்தும் கூட நகர நிர்வாகம் கருத்துக்களைக் கேட்டுப்பெற்றது.

**அறிஞர் கூற்றுக்கள்**

”கவுன்சிலின் இந்த இறுதிக்கால வரவுசெலவுத்திட்டத்தில், ப்ராம்ப்ட்டனின் நான்காவது, தொடர்ச்சியான, ”வரி உயர்வின்மையை” நாம் ஒருமனதாக ஆதரிக்கிறோம் மற்றும் வழங்குகிறோம்; மேலும் கணிசமான, எப்போதுமில்லாத கையிருப்பு நிதியையும் கொண்டிருக்கிறோம்; இது நிதிரீதியான நிலைத்து நிற்கும் தன்மை மற்றும் வளர்ச்சியை மனதில் வைத்து செய்த விஷயமாகும். புதிய பீல் மெமோரியல் மருத்துவமனைக்கு நிதியுதவியாக, $ 62.5 மில்லியனைக் ஒதுக்கீடு செய்து ப்ராம்ப்ட்டன் நகரின் ஆரோக்கியம் மீதானஅவசரநிலைக்கு பதில்வினையாற்றும் எங்கள் நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். 2022 வரவுசெலவுத் திட்டமானது, கோவிட்-19 தொற்றுநோய் தாக்கத்திலிருந்து விடுபட்டு முன்னேறுவதற்கு சமூகத்திற்கு ஆதரவளிக்கும் என்பதோடு, ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கைத் தரம் மற்றும் சேவையை வழங்குவதில் தொடர்ச்சியான வெற்றிக்காக நகரத்தை அமைக்கவும் உதவும். "

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகர்ம்; தலைவர், வரவுசெலவுத் திட்டக் குழு*

"2022 வரவு-செலவுத் திட்ட செயல்முறை முழுவதிலுமாக, ப்ராம்ப்ட்டன் மக்களை ஈடுபடுத்த நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டிருந்தோம்; அவர்கள் தங்கள் கருத்துக்களைக் வழங்கினார்கள்; சொத்து வரிகள் கட்டுபடியாகும் வகையில் இருப்பதையும் சேவை அளவுகள் உள்ளது உள்ளபடி பேணப்படுவதையும் ப்ராம்ப்ட்டன்வாசிகள் விரும்பினார்கள். நகரம் 50 க்கும் மேற்பட்ட வணிகங்கள் மற்றும் டெலி டவுன் ஹால்களில் 5,900 குடியிருப்பாளர்களும், சமூக ஊடக கருத்துக்கேட்பு மூலமாக 280 பதில்கள் கொடுப்பதிலும் ஈடுபட்டனர். நகரத்தின் 2022 வரவுசெலவுத் திட்டம் அவர்களின் கருத்துக்களை பிரதிபலிக்கிறது, மற்றும் ஒரு ஆரோக்கியமான, பலதரப்பட்ட, புதுமை படைக்கும்படியான மற்றும் துடிப்பான சமூகமாக ப்ராம்ப்ட்டனின் எதிர்காலத்தை உருவாக்கி நகரின் மதிப்பினைக் கூட்ட உதவும். "

*- பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணை தலைவர், வரவு செலவுத் திட்டக் குழு*

"பொருளாதார தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் நிலைத்து நிற்கவல்ல முதலீடுகளில் கவனம் செலுத்துவதன் மூலம், 2022 வரவுசெலவுத்திட்டங்கள் நமது வளர்ந்துவரும் சமூகத்தின் எதிர்காலத்தை வடிவமைக்க உதவுவதால், 2022 வரவுசெலவுத்திட்டமானது நமது நகரத்தை முன்னெடுத்துச் செல்லும். இந்த வரவுசெலவுத் திட்டமானது, கவுன்சில் கால முன்னுரிமை கொண்ட விஷயங்களுக்கான கால அவகாசத்துடன் இணைந்திருக்கிறது என்பதுடன், வாய்ப்புகளை உருவாக்கவும் தொடர்ந்து நம்மை அனுமதிக்கும்; நகரின் கட்டிடங்கள், பொது இடங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேவைகளை நமது குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்திற்கு பங்களிக்கும் வகையில் பராமரிக்கும். "

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள்

சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca